


# ஸத் ஸம்ப்ரதாயம்

य एतत्तारकं ब्रह्म ब्राह्मणो नित्यमधीते स पाप्मानं तरति स
मृत्युं तरति स ब्रह्महत्यां तरति स भ्रूणहत्यां तरति स वीरहत्यां तरति
स सर्वहत्यां तरति स संसारं तरति स सर्वं तरति सोऽविमुक्तमाश्रितो
भवति स महान् भवति सोऽमृतत्वं च गच्छति ॥ ४

இதன்பலன் - இந்த தாரக மந்திரமான (ராமா) பிரும்மத்தை தினமும் ஓதுபவன் - மரணத்தைக் கடக்கிறான். பிரும்ம ஹத்தி, வீரஹத்தி, ப்ரூண ஹத்தி முதலிய கொலைப் பாபங்களைக் கடக்கிறான். பிறவிக் கடலைக் கடக்கிறான். அவிமுக்தத்தை (தன்னை விட்டு என்றும் நீங்காத பிரும்ம நிலையை) அடைந்து மஹான் ஆகிறான். மொத்தத்தில் மரணமற்ற நிலை பெறுகிறான்.



## அருள் மொழிகள்

மனிதன் எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும், அது நியாயத்திற்கும் சத்தியத்திற்கும் விரோதமில்லாமல் இருக்க வேண்டும். நல்ல காரியம் செய்யும் சமயத்தில் எத்தனையோ இடையூறுகள் வரும், பலர் நிந்தனை செய்ய வரலாம் அல்லது அவனுக்கு ஐஸ்வர்ய நஷ்டமும், உயிருக்கு ஆபத்தும் கூட வரலாம். ஆனால் எல்லாவற்றையும் விட நியாயமும் சத்தியமும்தான் உயர்ந்தது என்கிற பாவத்தோடு, எடுத்துக்கொண்ட காரியத்தை செய்து முடிக்க வேண்டும்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ  தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## நீதிசதகம்

(மஹாகவி  பர்த்ருஹரி)

नमस्यामो देवान् अनुहत विधेः ते अपि वशगा
विधिः वन्द्यो सो अपि प्रतिनियत कर्म एकफलदः ।
फलं कर्म आयत्तं यदि किं अपरैः किंच विधिना
नम: तत् कर्मभ्यो विधि: अपि न येभ्य: प्रभवति ||

நமஸ்யாமோ தே$^3$வான் அனுஹத விதே$^4$: தே அபி வஶகா$^3$
விதி$^4$: வந்த்$^3$யோ ஸோ அபி ப்ரதிநியத கர்ம ஏகப$^2$லத$^3$: |
ப$^2$லம்’ கர்ம ஆயத்தம்’ யதி$^3$ கிம்’ அபரை: கிஞ்ச விதி$^4$னா
நம: தத் கர்மப்$^4$யோ விதி$^4$: அபி ந யேப்$^4$ய: ப்ரப$^4$வதி ||

நாம் தேவதைகளை வணங்குவோம். தேவர்கள் பூஜைக்குரியவர்களானாலும் அவர்களும் விதிக்கு உட்பட்டவர்களே. பலனளிக்க ஆரம்பித்த கர்மவினை கர்மாவிற்கு உரித்தான ஒரே பலனைத்தான் அளிக்கும். அப்படியானால் வேறு கர்மாவினால் தான் என்ன பயன்? விதியை நொந்துதான் என்ன ப்ரயோஜனம்? எது செய்தால் கர்மவினை என்பது இல்லையோ அந்த கர்மாக்களை நமஸ்கரிப்போம் (வணங்குவோம்). (கர்ம  பத்ததி:)




## விதுர நீதி

शान्तिखड्गः करे यस्य किं करिष्यति दुर्जनः ।
अतृणे पतितो वह्निः स्वयमेवोपशाम्यति ॥
ஶாந்திக²ங்க³: கரே யஸ்ய கிம்’ கரிஷ்யதி து³ர்ஜன: |
அத்ரு’ணே பதிதோ வஹ்னி: ஸ்வயமேவோபஶாம்யதி ||

பொறுமையாகிற கத்தி எவனது கையில் இருக்கிறதோ அவனை கெட்ட மனிதன் என்ன செய்ய முடியும்? கூளமில்லாத இடத்தில் மணலில் விழுந்த நெருப்பானது தானே அணைந்து விடுகிறது.

द्वाविमौ प्रसते भूमिः सर्पो बिलशयानिव ।
राजानं चाविरोद्धारं ब्राह्मणं चाप्रवासिनम् ॥
த்³வாவிமௌ ப்ரஸதே பூ⁴மி: ஸர்போ பி³லஶயானிவ |
ராஜானம்’ சாவிரோத்³தா⁴ரம்’ ப்³ராஹ்மணம்’ சாப்ரவாஸினம் ||



எந்த அரசன் சத்ருவை எதிர்த்து அடக்கவில்லையோ, எந்த பிறாமணன் தீர்த்தம் க்ஷேத்திரம் இவைகளுக்குச் செல்லவில்லையோ, இவ்விருவர்களையும் பூமியானது வளையில் இருக்கும் எலிகளை பாம்பு விழுங்குவது போல் விழுங்கி விடுகிறது.

द्वे कर्मणी नरः कुर्वन्नस्मिन्लोके विरोचते ।
अब्रुवन् परुषं किंचित् असतोऽनर्चयस्तथा ॥
த்³வே கர்மணீ நர: குர்வன்னஸ்மின்லோகே விரோசதே |
அப்³ருவன் பருஷம்’ கிஞ்சித் அஸதோ(அ)னர்சயஸ்ததா² ||

கடூரமான சொல்லைக் சொல்லாமலும் துஷ்டர்களை பூஜிக்காமலும் இருப்பது என்ற இவ்விரண்டு காரியங்கள் செய்கிறவன் இவ்வுலகில் பிரகாசிக்கிறான்.

द्वाविमौ पुरुषव्याघ्र परप्रत्ययकारिणौ ।
स्त्रियः कामितकामिन्यः लोकः पूजितपूजितः ॥
த்³வாவிமௌ புருஷவ்யாக்⁴ர பரப்ரத்யயகாரிணௌ |
ஸ்த்ரிய: காமிதகாமின்ய: லோக: பூஜிதபூஜித: ||

ஓ புருஷச்ரேஷ்டனே ! இவ்வுலகில் இரண்டு பேர்கள் பிறர் செய்வதைப் பார்த்து தானும் செய்வார்கள். ஸ்திரீகள் பிறர் ஆசை கொண்ட வஸ்துவில் ஆசைப்படுவார்கள். ஸாமான்ய ஜனங்கள் பிறரால் கொண்டாடப்பட்டவர்களை தானும் கொண்டாடி பூஜிப்பார்கள். (தொடரும்…..)



# ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ மஹாஸந்நிதானம் ஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

## நமது குருநாதர்

அவர் மற்றவரின் மனதைச் சிறிதும் புண்படுத்த மாட்டார். அவர் கூறுவார் "உன் மனது புண்படும்படி நான் ஏன் எதுவும் கூற வேண்டும்? அவ்வாறு (தவறாக) நடந்து கொண்டதற்கு உனக்கு என்னென்ன கவலைகளும் நிர்பந்தங்களும் இருந்தனவோ? மேலும், உன் மனதை வருத்துவதில் எனக்கென்ன லாபம்?”



சீடர்கள் ஆசார்யரை அணுகி தாங்கள் ஊருக்குத் திரும்பிச் செல்வதற்கு விடைகோரும் போதெல்லாம், "நீங்கள் வந்து இருக்கிறீர்கள். உங்களுக்கு வேறு அவசர நிர்ப்பந்தங்கள் இல்லாத வரை நீங்கள் இங்கு இருப்பீர்கள் என்பதை நான் அறிவேன்" என்று சொல்வார். மற்றவர்களை நிர்ப்பந்தப்படுத்த விரும்பாத அவருடைய சீரிய குணத்துக்கு இதுவே சான்று.

(ஜகத்குரு சங்கராசார்யார் ஶ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள் மற்றும் ஜகத்குரு சங்கராச்சாரியார் மஹாஸன்னிதானம் ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)

நான் ஆசார்யாள் நிழலில் இருந்த இந்த 23 வருடங்களில் இதுபோல் அநேக சிந்தனையைத் தூண்டும் நிகழ்ச்சிகளைப் பார்த்து அனுபவித்திருப்பது என் பாக்கியமே. இதில் ஒரு விசேஷமென்ன வென்றால் நம் ஆசார்யரும் அவர் குருவின் நிழலில் 23 வருடங்களே இருந்திருக்கிறார். ஆனால், ஒரு வித்யாஸம். அவர் தம் குருவினிடம் ஸந்யாச தீக்ஷை பெற்ற பிறகு 23 வருடங்கள் இருந்தார். நானோ முதல் எட்டு வருஷங்கள் பிரம்மசாரியாகவேதான் அவருடன் இருந்தேன்.

அவருக்கு என்பால் மிகுந்த அன்பிருந்தது என்பதை அவர் பேச்சுக்களிலிருந்தே அறிய முடிந்தது. நான் சிருங்கேரி வந்த புதிதில் ஒரு பிரதோஷ தினத்தில் நதியின் மறுகரை சென்று வந்தேன். அன்றிரவு பூஜைக்கு உட்காரும்போது என்னிடம், "நீ நதியின் மறுகரைக்குச் சென்றிருந்தாயா?" என வினவினார். நான், 'ஆம்" என்று பதிலுரைத்தேன். அதற்கு அவர், "நீ இங்கு நரசிம்ம வனத்திலேயே இருந்து கொண்டிரு. வேறு ஓரிடமும் செல்ல வேண்டாம். நான் உன்னை கவனித்துக் கொண்டே இருப்பேன்" எனக் கூறினார். என் போக்குவரத்துகளை அவர் கவனித்துக் கொண்டு வந்திருக்கிறார் என்பதை நான் அறியேன். நான் நரசிம்ம வனத்திலேயே இருக்க வேண்டுமென்றும், என்னை அவர் கவனித்துக் கொண்டிருப்பதாகவும் சொன்ன அவ்வார்த்தைகள், என்னிடம் அவருக்கிருந்த அபார கருணையையே எடுத்துக்காட்டுகிறது.



"பாடம் கற்கும்போது மனதில் யாதொரு சலனமும் இருக்கக் கூடாது. மனம் அலைபாய ஆரம்பித்தால் விஷயத்தில் தேர்ச்சி பெற முடியாது" என்பார் என் குருநாதர். தாம் சிறிது நேரம் பாடத்தில் ஈடுபடாமல் இருந்தாலே தம் குரு ஸ்ரீ சந்திரசேகர பாரத் மஹாஸ்வாமிகள் தம்மைக் கோபிப்பார் என்றும் கூறுவார்.



இதுபோல் மடத்தின் சம்பிரதாயங்களையும் சிஷ்யர்களிடம் நடந்துகொள்ளும் விதம் பற்றியும் எவ்வளவோ கற்றுத் தந்திருக்கிறார். சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் பல பேர்களின் குண அதிசயங்களைப் பற்றியும் கூறுவார். ஆனால் இறுதியில், "மற்றவர்கள் எவ்வளவு மாறுபட்ட குணாதிசயங்களைக் கொண்டு இருந்தாலும் நாம் அவர்களிடம் ஒரே ரீதியான அபிமான பாவத்துடன்தான் இருக்க வேண்டும். ஒருவரும் அவ்விஷயத்தில் குறைபட்டுக் கொள்வதற்குக் காரணமாக நாம் இருக்கக் கூடாது" என்று சொல்லி அறிவுறுத்துவார்.

தசரத மஹாராஜா எப்படி நடந்து கொண்டார் என்பதை காளிதாஸன் இவ்வாறு விவரிப்பார். அதாவது, இராஜ்ஜியத்தில் ஒவ்வொருவனும் தன்னைத்தான் இராஜா மிகவும் நேசிக்கிறார் என்று எண்ணிக் கொள்ளுமளவிற்கு தசரதன் நடந்துகொள்வாராம். நம் ஆசார்யாள். "இதோ பாருங்கள் சுவாமிகளே! தசரதமஹாராஜன் காலத்துக்குத்தான் இது பொருந்தும் என்று நாம் எண்ணக் கூடாது. இன்றும் நாம் மற்றவர்களிடம் நடந்துகொள்வதற்கு இது ஒரு வழிகாட்டியே" என்று கூறுவார். இவ்வாறு பற்பல விஷயங்களைக் கற்றுத்தந்து என்னை அனுக்ரஹித்திருக்கிறார் நம் குருநாதர்.

மற்றுமொரு விசேஷம் என் மனதில் தோன்றியது. நம் குருநாதர் 1931ல் ஸந்யாச தீக்ஷை பெற்று, அவர் குருவிடம் 23 வருடங்கள் பணிவிடை செய்து, 1954ல் பீடாதிபதியாக பட்டாபிஷேகம் செய்யப்பட்டார். அவர் நம் குரு பரம்பரையில் 35வது பீடாதிபதியாக இருந்தது மட்டுமின்றி, அவர் பீடாதிபத்யமும் 35 வருடங்கள் நீடித்தது. இது என்ன ஈச்வர ஸங்கல்பமோ தெரியவில்லை.

(தொடரும்....)



# பூமி ஸூக்தம்

**(அதர்வ வேதம் 12.1)**

விளக்கம் மட்டும் இங்கு பார்க்கப்படும்

1. மேலான உண்மை, மாறாத நேர்மை, புனிதம், தவம், நல்லொழுக்க வாழ்க்கையினால் வரும் ஆற்றல், வேள்வி இவையே பூமியைத் தாங்குகின்றன. கடந்து சென்றவை மற்றும் இனி வருபவற்றின் தலைவியான அந்த பூமாதேவி பரந்த இடத்தை தரட்டும்!



2. மனிதர்களுக்கிடையில் பகைமை ஒழியட்டும். உயரங்கள், மேடுகள், சமதளங்கள் எல்லாம் யாருடையதோ, பல்வேறு ஆற்றல்களுடைய மூலிகைகளை யார் தாங்குகிறாளோ, அந்த பூமி நமக்கு பரந்த இடத்தைத் தரட்டும்; நமக்கு வளம் நிறைந்ததாக ஆகட்டும்!

3. வளைந்தோடுகின்ற நதிகள் யார் மீது பகலும் இரவும் தவறாமல் சமமாக ஓடுகின்றனவோ, பல்வேறு பிரிவுகள் நிறைந்த அந்த பூமாதேவி நமக்கு செல்வத்தை தரட்டும்; செல்வ வளத்தைப் பொழியட்டும்!

4. பூமித் தாயே, உன்னுள் என்ன உள்ளதோ, உனது தொப்புளில் என்ன உள்ளதோ, உனது தேகத்திலிருந்து என்னென்ன உணவு வெளிப்படுமோ அவற்றை எங்களுக்குத் தருவாய். எங்களைப் புனிதப்படுத்துவாய். எனது தாய் பூமி; நான் பூமித்தாயின் மகன். மழைக்குத் தலைவனான இந்திரன் என் தந்தை; அவனும் நம்மை நிறைவுறச் செய்யட்டும்!

(பூமி ஸூக்தம் தொடரும் ....)



## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 1. பகுத்தறிவு (விவேகம்)

### விவேகம் -சாஸ்திரத்தில் சிரத்தை

“...ஒருவர் தமக்கு உரிமையான ஒரு நிலப்பகுதியை நன்கொடையாகக் கொடுத்தார். காலப்போக்கில் அவர் மடத்திற்கு கொடுத்த நிலத்தை ஒட்டியுள்ள பகுதிகளும் மடத்தின் நிர்வாகத்தின் கீழ் வந்துவிட்டன. இவ்வாறு இருக்கும் போது, நிலத்தை மடத்திற்குக் கொடுத்தவரின் வாரிசு, கொடையாகக் கொடுக்கப்படாத பகுதியை மீட்க விரும்பினார். அக்காலத்தில் மடத்தின் நிர்வாக அதிகாரியாக இருந்தவர் இதற்கு உடன்படவில்லை. எனவே இந்த விஷயம் நீதி மன்றத்திற்குச் சென்றது. சர்ச்சைக்கு உரிய நிலம் பல நாள் மடத்தின் நிர்வாகத்தின் கீழ் இருந்ததால், வழக்கில் மடமே வெல்லும் என்பதே சட்ட வல்லுனர்களின் கருந்தாக இருந்தது. இச்சமயத்தில், வழக்கு தொடர்ந்தவர் ஆசார்யாளுக்கு ஒரு கடிதம் எழுதி ஆசார்யாளை இந்த விஷயத்தில் நேரடியாக இடையிடுமாறு வேண்டிக்கொண்டார். விஷயத்தை ஆராய்ந்த ஆசார்யாள், மடத்து அதிகாரியிடம், 'வழக்கைத் திரும்பப் பெறுங்கள். மடத்திற்குக் கொடுக்கப்படாத நிலப்பகுதியை அவருக்குத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்” என்று கட்டளையிட்டார். இந்த வழக்கிற்காக மடம் ஏற்கனவே ஆயிரக்கணக்கில் பணம் செலவழித்திருந்தது; தீர்ப்பும் மடத்திற்குச் சாதகமாக வரும் சாத்தியக்கூறே அதிகம் போன்றவையெல்லாம் ஆசார்யாளின் முடிவை மாற்ற இயலவில்லை. இதற்கிடையில், வழக்கு தொடர்ந்தவர் தாம் மடத்திற்கு ரூ.12,000 கொடுத்து, இந்த விஷயத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளத் தயாராக இருந்தார். மடத்தின் சார்பாக ஆஜரான வழக்கறிஞரும் இதற்கு உடன்பட்டார். ஆசார்யாளோ மடம் அந்நபரிடமிருந்து ஒரு பைசா கூட வாங்கக் கூடாது என்றும், சர்ச்சைக்குரிய நிலப்பகுதி அவருக்குத் திருப்பித் தரப்பட வேண்டும். என்றும் கட்டளையிட்டார். மடத்தின் அதிகாரிகளும் அவ்வாறே செய்தனர் ..."

“...பெங்களூரில் ஒரு சமயம் நீதிமன்ற வழக்கு ஒன்றில் மடத்தின் சார்பாக அதிகாரிகள் ஆஜராக வேண்டியிருந்தது. மடத்தின் தலைமை அதிகாரி இதைப் பற்றி ஆசார்யாளிடம் கூறும் போது, நிகழ்பாட்டை மடத்திற்குச் சாதகமாக நீதிமன்றத்தில் எடுத்துரைத்தால் மடத்திற்கு ஆதாயமாக இருக்கும் என்றார். ஆசார்யாள் அவரிடம், "நீதிமன்றத்தில் இன்று சொல்வதை நாளை நாம் செய்ய முடியுமா” என்று வினவினார். அதிகாரி, 'இல்லை. இப்படி நாம் சொல்வதைச் செயல்படுத்துவது சிரமமே' என்று உண்மையை ஒப்புக்கொண்டார். ஆசார்யாள் உடனே, 'அப்படியானால், விஷயத்தை இந்த மாதிரி நீதிமன்றத்தில் உரைக்காமல், உள்ளதை உள்ளவாறே கூறுங்கள்' என்றார் ..."

“... சில சமயங்களில், நாம் "இதுவே சரியான நிலைப்பாடு" என்று தீர்மானமாக இருக்கும் விஷயங்கள் அவ்வாறு நடப்பதில்லை. சாதாரணமாக. நாம் இது



போன்ற சமயங்களில் மிரட்டல், போராட்டம் போன்ற எதிர் நிலைப்பாடுகளை நாடுகிறோம். இவை வெறுப்பை அடிப்படையாகக் கொண்டவை. ஆசார்யாள் இவ்வழிமுறைகளை என்றும் ஆதரித்ததில்லை. ஏனென்றால், அப்படிச் செய்யும் போது நாம் விரைவிலேயே சட்டத்திற்குப் புறம்பான நிலையை மேற்கொள்ளத் தள்ளப்படுகிறோம். எனவே, “இது சரி”, “அது தவறு” என்ற பாகுபாடு நாம் அடைய விரும்பும் விஷயத்தில் மட்டுமல்லாமல் அதற்காக நாம் மேற்கொள்ளும் வழிமுறையிலும் இருக்க வேண்டும் என்பதை ஆசார்யாள் உறுதியாகக் கடைபிடித்தார். இதனாலேயே ஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், தாம் புனைந்த நாமாவளியில் ஆசார்யாளை "धर्माधर्मविभागज्ञ:” (எது தர்மம், எது அதர்மம் என்ற வேறுபாட்டை அறிந்தவர்) என்பதோடு நிற்காமல் அவரை “न्यायमार्गानुसारी” (நியாய வழியில் நடப்பவர்) என்றும் துதிக்கிறார். இது குறித்து இங்கே மேலும் ஒரு சம்பவத்தைக் கூறி இப்பகுதியை நிறைவு செய்வோம்:




"... 1976ம் ஆண்டு, (ஆசார்யாள் சென்னையில் முகாமிட்டிருந்த போது) தில்லியிலிருந்து வந்திருந்த சிஷ்யர் ஒருவர், ஆசார்யாள் தில்லியில் முகாமிடும் போது கோ ஸம்ரக்ஷண ஆதரவுப் போராட்டம் ஒன்று பெரிய அளவில் நடக்கவுள்ளது, அது தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்படும், அதில் ஆசார்யாள் கலந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார். அதற்க்கு, ஆசார்யாள் தம் குரலை உயர்த்தி, 'கோ ஸம்ரக்ஷண ஆதரவுப் போராட்டத்தில் கலந்து கொள்வதோ, தொலைக்காட்சியில் வருவதோ எனக்கு ஒவ்வாததவை. ஆனால், எனக்கு கோ ஸம்ரக்ஷணர்த்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. சிருங்கேரியில் நாங்கள் பல பசுக்களைப் பாதுகாத்து வருகிறோம். யார் சிருங்கேரிக்கு வந்தாலும் இதைப் பார்க்கலாம்' என்றார் ..."

(தொடரும் ...) மிக்க நன்றி : Centre for Brahmavidya



# நீதி மஞ்ஜரீ

## ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் - 2
### பொறுமை

ஆனால் குருவைத்தேடி அத்யயனம் செய்வதற்குள்ள வயது தாண்டிவிட்டபடியால் தபஸ்ஸினாலேயே தன் மனோரதத்தைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்று நினைத்துத் தபஸ் செய்தான். தேவேந்திரன் பிரத்யக்ஷமான போது எல்லாவேதங்களும் எனக்கு ஸ்புரிக்க வேண்டும் என்று வரம் கேட்டான். அதற்கு இந்திரன் குருமுகமாய் கிரமப்படி அத்யயனம் செய்தாலொழிய வேத விஷய ஞானம் ஏற்படாது என்று சொல்லி மறைந்துவிட்டான். ஆனால் இந்த யவக்ரீதன் தன் பிடிவாதத்தை விடாமல் மறுபடியும் இன்னம் கடினமாகத் தபஸ் செய்ய ஆரம்பித்தான்.

அப்பொழுது அவனைத் திருப்புவதற்கு வேறு வழி இல்லாததினால் தேவேந்திரன் ஒரு கிழ பிராஹ்மணராக இருமிக்கொண்டு கங்கா நதிக்கரையில் உட்கார்ந்துகொண்டு கரையிலிருந்து ஒவ்வொரு பிடிமண் எடுத்து நதியில் போட்டுகொண்டிருந்தான்.



Jagadguru Sri Abhinava Vidyatirtha Mahaswamigal and Jagadguru Sri Bharati Tirtha Mahaswamigal with Sri Jnanananda Bharati (purvashrama name : Sri Krishna Swami Aiyar) who was an ardent follower of Sringeri Mutt. He wrote many articles, experiences and life history of Jagadguru Sri Chandrashekhara Bharati Mahaswamigal, without which we would not have known much of this great Jivanmukta.
- Posted by N Jambunathan Iyer, Chennai Tamil Nadu India

இதைப் பார்க்க நேரிட்ட யவக்ரீதன் அந்த பிராஹ்மணரிடம் போய் "என்ன செய்கிறீர் ? வீணாக சிரமப்படுகிறீரே" என்று கேட்டான். அதற்கு அவர் "ஜனங்கள் அக்கரைக்குப் போவதற்கு சிரமப்படுவது உமக்குத் தெரியவில்லையா? அதற்காகப் பாலம் கட்ட ஆரம்பிக்கிறேன்" என்று சொன்னார். அதைக்கேட்டு சிரித்துக்கொண்டு "அசட்டுப் பிராஹ்மணரே! நதியில் மண்ணைப் போடுகிறீர், அதைப் பிரவாஹம் அடித்துக் கொண்டு போய் விடும் என்று தெரியாமல். இந்த ரீதியில் நீர் பாலம் எப்படிக் கட்ட முடியும்?" என்று கேட்டான். அதற்கு அந்த பிராஹ்மணர் "குருகுல வாஸம் இல்லாமலே வேதங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று செய்யும் பிரயத்தினத்தை விட என் பிரயத்தினம் அசட்டுத்தனமா?" என்று கேட்டார். உடனே அந்த பிராஹ்மணர் இந்திரன் தான் என்பதை யவக்ரீதன் உணர்ந்து கொண்டு "நான் இதுவரையில் செய்த தபஸ்ஸிற்குப் பலனாக என்னை எல்லோரும் வித்வானென்று மதிக்கும்படி வரம் கொடுக்கவேண்டும்" என்று கேட்டான். அதற்கு இந்திரன் "உனக்கு எந்த ஸமயத்தில் எந்த வேதபாகம் உபயோகப்பட வேண்டுமோ அது மாத்திரம் ஸ்புரிக்கும்" என்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டான். இந்த விஷயத்தை தன் தகப்பனாரிடம் சொன்னபோது அவர் "இந்த வரம் உனக்கு க்ஷேமமில்லை. உன்



அஹம்பாவத்தையே ஜாஸ்திப்படுத்தும். எப்படியும் ரைப்யரிடத்திலாவது அவர் குமாரர்கள் இடத்திலாவது ஜாக்கிரதையாக நடந்து கொள்" என்று எச்சரித்தார்.

பிற்பாடு ஒரு வஸந்த ருதுவில் யவக்ரீதன் வனத்தில் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கையில் ரைப்யருடைய தோட்டத்தில் புகுந்தான். அங்கே ரைப்யருடைய மருமகளைக்கண்டு மோஹித்து பலாத்காரம் செய்தான். பிறகு அவள் இவ்விஷயத்தை கண்ணும் கண்ணீருமாக ரைப்யரிடத்தில் தெரிவித்தாள். அவருக்கு உடனே கோபம் வந்து இரண்டு ரோமங்களை எடுத்து ஆஹுதி பண்ணினார். உடனே அதிலிருந்து ஒரு ராக்ஷஸனும் ராக்ஷஸியும் கிளம்பினார்கள். அவர்களைப் பார்த்து "யவக்ரீதனைக் கொல்லுங்கள்" என்று உத்தரவு கொடுத்தார். அந்த ஸமயம் யவக்ரீதன் போஜனம் செய்து கொண்டிருந்தான். அந்த கண்ணுக்குத் தெரியாமல் வந்து தீர்த்தப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டாள். அந்த ராக்ஷஸன் சூலத்தினால் யவக்ரீதனைக் குத்துவதற்காக வந்தான். அவனை விரட்டுவதற்கு யவக்ரீதனுடைய கை எச்சிலாக இருந்தபடியால் வேதத்தை உச்சரிக்க முடியவில்லை. உடனே எழுந்திருந்து பக்கத்திலிருந்த குளத்தில் கையலம்பப் போனான். அதுவும் பக்கத்திலுள்ள குட்டைகளும் கூட ஜலமில்லாமல் வற்றிவிட்டன. தன் தகப்பனாருடைய அக்னிஹோத்ர சாலைக்குப் போய்விட்டால், அங்கே ராக்ஷஸ வர முடியாதென்று அங்கு ஓடினான். யாரும் உள்ளே போகக்கூடாது என்று தடுப்பதற்கு அங்கே இருந்த வேலைக்காரன் தடுத்து விட்டான். உடனே ராக்ஷஸன் யவக்ரீதனை அடித்துக்கொன்றுவிட்டு ரைப்யரிடம் போய் சொல்லிவிட்டான்.

சற்று நேரம் சென்று வெளியில் போயிருந்த பரத்வாஜர் ஆசிரமத்திற்குத் திரும்பி வந்தார். அவருடைய புத்திரன் இறந்து விட்ட படியால், அவருக்கு அது விஷயம் தெரியாமல் இருந்தபோதிலும், ஆசௌசம் ஏற்பட்டுவிட்டதால் அக்னி வழக்கம்போல ஜ்வலிக்கவில்லை. “என்ன விஷயம்? ஏன்?" வேலைக்காரனைக் கேட்டவுடன் அவன் நடந்த விஷயத்தைச் சொல்லிவிட்டான். அதைக் கேட்டவுடன் துக்கம் தாங்காமல் “இந்த ரைப்யருக்கு நான் வயதானவன், யவக்ரீதன் எனக்கு ஒரே புத்ரன் என்ற விஷயம் தெரியும், அப்படியிருந்தும் கோபத்திற்குப் பரவசனாய் என்னுடைய புத்ரனைக் கொன்றுவிட்டாரே, அவரை தண்டித்துத்தான் ஆகவேண்டும். அவருடைய புத்ரனாலேயே அவர் கூடிய சீக்கிரம் மரணத்தை அடையவேண்டியது" என்று சாபம் கொடுத்துவிட்டு, உடனே "ஐயோ, என்ன செய்துவிட்டேன்! புத்ரசோகம் ஏற்பட்டுவிட்டதினால் என் புத்தியை என்னுடைய அத்யந்த ஸ்நேஹிதரையே சபித்துவிட்டேனே! இனி நான் ஒரு க்ஷணமும் ஜீவித்திருக்க அவசியமில்லை" என்று சொல்லி தன் புத்ரனுடைய அபரக்ரியையைச் செய்துவிட்டுத் தானும் அக்னிப் பிரவேசம் செய்துவிட்டார்.
(தொடரும் ...)
மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி



# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஶ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

## (ஸ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

स्थालीपुलाकाख्यनयेन मातः जगन्ति सर्वाण्यपि पालयामि ।
इत्येतदर्थस्य विबोधनाय बालं निजाङ्के विदधासि किं त्वम् ॥
ஸ்தா²லீபுலாகாக்²யனயேன மாத꞉ ஜக³ந்தி ஸர்வாண்யபி பாலயாமி |
இத்யேதத³ர்த²ஸ்ய விபோ³த⁴னாய பா³லம்' நிஜாங்கே வித³தா⁴ஸி கிம்' த்வம் ||




தாயே ! பானைச் சோற்றிற்கு ஒரு பருக்கையைப் பதம் பார்ப்பது போல் உலகனைத்தையும் நான் காப்பாற்றுகிறேன் எனக் காட்ட சிறுவனைத் தன் மடியில் வைத்துள்ளாயா? (5)

एकमेवाम्बरं वाणि विरूपं च वदन्ति हि ।
नवाम्बराणि धत्से त्वं सुरूपाणि कथं वद ।।
ஏகமேவாம்ப³ரம்' வாணி விரூபம்' ச வத³ந்தி ஹி |
நவாம்ப³ராணி த⁴த்ஸே த்வம்' ஸுரூபாணி கத²ம்' வத³ ||

ஒரே அம்பரம் (ஆகாசம்) தானுள்ளது. அதற்கு உருவமில்லை என்பர். நீயோ அழகான புதிய (ஒன்பது) அம்பரங்களை (புதிய ஆடைகளை) தரித்துள்ளாயே எப்படி? (ஆடை -ஆகாயம் என்ற இரு பொருள் கொண்ட அம்பரம் என்ற சொல்லை வைத்து சிலேடை) (நவ - புதிய -ஒன்பது). (6)

आकाशवत्सर्वगतश्च नित्य इत्यादि वेदेऽम्ब किलाम्बरस्य ।
प्रत्नत्वमेकत्वमपि प्रसिद्धं कथं नवत्वं समभूदमुष्मिन् ॥
ஆகாஶவத்ஸர்வக³தஶ்ச நித்ய இத்யாதி³ வேதே³(அ)ம்ப³ கிலாம்ப³ரஸ்ய |
ப்ரத்னத்வமேகத்வமபி ப்ரஸித்³த⁴ம்' கத²ம்' நவத்வம்' ஸமபூ⁴த³முஷ்மின் ||

ஆகாசத்தைப் போன்று எங்கும் பரவியுள்ளது, அழியாததும் கூட என்றவாறு வேதத்தில் அம்பரத்திற்கு (ஆகாசத்திற்கு) எக்காலமும் உள்ளது, பழைய பொருள், (அழியாதது), ஒன்றே உள்ளது என்ற ப்ரஸித்தி உள்ளது. அதற்கு நவத்வம் (புதிதாக -ஒன்பதாக உள்ளது என்பது எப்படி நேர்ந்தது? (இதுவும் சிலேடை) (7)
(தொடரும்....)



# ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்

## (வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)

(ஸ்ரீ ஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்-ஸநத்குமாரரிடையே நடந்த உரையாடல்)

அத்தியாயம் : மூன்று

மாக மாதத்தில் இராமாயணத்தைக் கேட்பதன் பலன்; மன்னன் சுமதி-சத்தியவதியின் முற்பிறவி வரலாறு

மன்னர் சுமதி மேலும் கூறுகிறார் : அவர்கள் எங்களை ஒரு விமானத்தில் ஏற்றி பரமபதத்திற்கு அழைத்துச் சென்றார்கள். நாங்கள் இருவரும் தேவதேவனான சக்கரபாணியின் சந்நிதியை அடைந்தோம். அரிய, பெரிய போகங்களை எவ்வளவு காலம் நாங்கள் அவ்வுலகில் அனுபவித்தோம் என்பதைக் கேளுங்கள், வியக்கத்தக்க அந்த நிகழ்வை கூறுகிறேன். ஆயிரம் கோடி யுகங்களும் நூறு கோடி யுகங்களும், ஸ்ரீராமனுடைய அவ்விடத்தில் இருந்துவிட்டு, பிரும்மலோகம் போய்ச் சேர்ந்தோம். அங்கேயும், (முன்னர் கூறிய) அதே அளவு காலம் இருந்துவிட்டு தேவலோகம் வந்து சேர்ந்தோம்.



முனிசிரேஷ்டரே! அங்கேயும் அதே அளவு காலம் (ஆயிரத்து நூறு கோடி யுகங்கள்) உத்தமோத்தமமான போகங்களை அனுபவித்துவிட்டு. பின்னர். இந்த மண்ணுலகை இறுதியாக வந்தடைந்தோம். இராமாயணத்தை மனமொப்பி கேட்காவிட்டாலும், ஏனோ-தானோவென்று கேட்டதன் பயனாக இங்கேயும், இப்போது நாங்கள் அனுபவித்துவரும் மகத்தான பாக்கியங்களைப் பெற்றோம்.

அறவடிவினரே! இராமாயண கதையை பக்திபூர்வமாக ஒன்பது தினங்கள் கேட்டாலே. அது, அவனுடைய மறுபிறவி. வயோதிகம். மரணம் என்பவைகளை அழித்துவிடும். என்பதற்கு நாங்களே சான்று. அந்தணோத்தமரே! மனப்பூர்வமாக இல்லாவிட்டாலும் ஏதோவொரு விதத்தில் இராமாயணத்தைக் கேட்டாலே, அது மிகப்பெரும் பயனை அளிக்கிறது. எனவே, அந்த இராமாயணத்தை என்றும் நாங்கள் கேட்கிறோம்.



நாரதர் கூறுகிறார்- இவையெல்லாவற்றையும் கேட்ட பின்னர், மாமுனிவரான விபாண்டகர். மன்னரை வாழ்த்தி விட்டு, தன்னுடைய தபோவனத்திற்கு மிக்க மகிழ்சியுடன் சென்றார். வேதவித்தகர்களே! நீங்கள் எல்லோரும் தேவதேவனும் சக்கரதாரியுமான ஸ்ரீஹரியின் கதையைக் கேளுங்கள். இராமாயண கதை, விரும்பியவற்றை எல்லாம் அளிக்கும் காமதேனு என்று சொல்லப்படுகிறது. எல்லா தருமங்களின் பலனையும் கொடுக்கக் கூடிய இராமாயணத்தை. மாசி வளர்பிறையில், தொடர்ந்து ஒன்பது நாட்களும் கேட்க வேண்டும். புனிதமான இந்த வரலாறு, எல்லாப் பாவங்களையும் போக்கக் கூடியது. எவனொருவன் இதைப் படிக்கிறானோ, அல்லது கேட்கிறானோ அவன் இராம பக்தனாக ஆகிவிடுகிறான் என்பதில் சிறிதளவும் சந்தேகம் இல்லை.

ஸ்ரீஸ்கந்தபுராணம், இராமாயண மாஹாத்ம்யம் என்ற பகுதியில்
மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

அத்தியாயம் : நான்கு

சைத்ர மாதத்தில் இராமாயணத்தைக் கேட்பதால் ஏற்படும்
பலன்: கலிகன்-உத்தங்கன் வரலாறுகள்

நாரதர் கூறுகிறார் - இன்னொரு மாதத்தில் (சைத்ரம்) இராமாயணத்தைப் படிப்பதால் ஏற்படும் பலன்களைச் சொல்கிறேன். கவனமாகக் கேளுங்கள். இராமாயண மாஹாத்ம்யம். எல்லாப் பாவங்களையும் போக்கக் கூடியது; புண்ணியம் தருவது; எல்லாத் துயரங்களையும் அழிப்பது; பெண்கள் மற்றும் நான்கு வருணத்தாருக்கும். அவர்கள் விரும்பியவற்றை எல்லாம் கொடுக்கக் கூடியது; எல்லா விரதங்களின் பலன்களைக் கொடுப்பது தீயகனவுகளை அழிப்பது; பெரும்பேற்றை அளிப்பது; இகலோக-பரலோக சௌக்கியத்தைக் கொடுக்கக் கூடியது. இந்த விஷயத்தில் (சைத்ர மாத இராமாயணம் படிப்பதில்). ஒரு பழைய வரலாற்றை ஆன்றோர்கள் கூறுகிறார்கள். அந்த வரலாற்றைப் படிப்பவர்கள்-கேட்பவர்களின் எல்லாப் பாவங்களும் நசித்துப் போகின்றன.

முன்பொரு கலியுகத்தில், கட்டுப்பாடுகள் இல்லாமல் திரிந்த கலிகன் என்பவன் இருந்தான். பிற பெண்களையும் பிறர் சொத்துக்களையும் அபகரிப்பதையே தொழிலாகக் கொண்டவன் எப்போதும் பிறரைப் பற்றிக் குறை சொல்லிக் கொண்டேயிருப்பான்; எல்லாப் பிராணிகளையும் துன்புறுத்துவான். நூறு, ஆயிரக்கணக்கில் அந்தணர்களையும் பசுக்களையும் கொன்று குவித்திருந்தான். (தொடரும் …..)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்